

மகாகவி பாரதியார் 144-வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசு சார்பில் எட்டயபுரம் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் கீதா ஜீவன், கலெக்டர் க.இளம்பகவத், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.கோவில்பட்டி சார் ஆட்சியர் ஹிமான்ஷு மங்கல், எட்டயபுரம் பேரூராட்சி தலைவர் ராமலட்சுமி,வட்டாட்சியர் சுபா ஆகியோர் உடன் இருந்தனர்.

## நேஷனல் பொறியியல் கல்லூரியில் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான இணையவழி ஆப்ஜெக்ட்டிவ் தேர்வு

**கோவில்பட்டி, டிச 12**

நேஷனல் பொறியியல் கல்லூரி , +2 பயிலும் மாணவ மாணவியர்கள் அரசு பொதுத் தேர்வு மற்றும் ஜே.இ.இ நுழைவுத் தேர்வு போன்ற தேர்வுகளில் இயற்பியல், கணிதவியல் மற்றும் வேதியியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு உதவும் வகையில் அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு இணையவழி ஆப்ஜெக்ட்டிவ் தேர்வு கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இதில் கடந்த ஆண்டு மொத்தம் 6500க்கு மேற்பட்ட +2 மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் 7-வது ஆண்டு தொடர்ச்சியாக ஒவ்வொரு மாத ஞாயிற்றுக் கிழமைகளில் அதாவது டிசம்பர் 28, ஜனவரி 04,11,18,25 மற்றும் பிப்ரவரி 1 ஆகிய நாட்களில் மதியம் 2.00 மணி முதல் 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

+2 வில் கணிதவியல், இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகிய மூன்று பாடங்களில் ஏதேனும் ஒன்று, இரண்டு அல்லது மூன்று பாடங்களை பயிலும் மாணவ மாணவியர்கள் தமிழ் அல்லது ஆங்கில வழியில் கைபேசி வாயிலாக இணைய வழியில் கலந்து கொள்ளலாம்.ஒவ்வொரு பாடத்திலும் பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி வினாக்களிலிருந்து 25 உட்பட 75 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு பாடத்திலும் முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவ மாணவிகளுக்கு தலா ரூ1000-மும் அடுத்த பத்து இடங்களைப் பெறும் மாணவ மாணவிகளுக்கு தலா ரூ500-ம் வழங்கப்படும்.இத்தேர்வில் பங்கேற்க பதிவு கட்டணம் ஏதும் கிடையாது, பங்கேற்க விரும்புபவர்கள் தங்களது பெயர்களை கல்லூரி வலைத்தளமான www.nec.edu.in யில் அல்லது https://bit.ly/necoot2025 என்ற இணைப்பிபோ பதிவு செய்யலாம். மேலும் விவரங்களுக்கு 73053 55923, 99945 72357, 90422 03328 என்ற கைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று கல்லூரி முதல்வர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



கோவில்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மற்றும் பள்ளி கல்வித்துறை இணைந்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் பி.கீதா ஜீவன் மிதிவண்டிகளை வழங்கினார். கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கா. கருணாநிதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி நகராட்சி பகுதிக்குட்பட்ட புனித மிக்கேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில் நகர செயலாளரும் நகர் மன்ற தலைவருமான ஆர்.சாதிர் உட்பட நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் ஆட்சிமொழிச்சட்ட வாரம் 17ம் தேதி தொடக்கம்: கலெக்டர் தகவல்

திருச்செந்தூர் டிச 12

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் வருகிற 17ஆம்தேதி முதல் 26ம் தேதி வரை ஆட்சிமொழிச் சட்டவாரம் கொண்டாடப்பட உள்ளது இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளினை நினைவுகூரும் வகையில் ஒரு வார காலத்திற்கு ஆட்சிமொழிச் சட்ட வாரமாக தூத்துக்குடி மாவட்டத்தில் கொண்டாடப்பட உள்ளது. இவ்வாண்டு ஆட்சிமொழிச் சட்ட வாரம் 17.12.2025 முதல் 26.12.2025 வரை ஒருவார காலம் நடைபெற உள்ளது. ஆட்சிமொழிச் சட்ட வாரவிழாவின் இரண்டாம் நாளான 18.12.2025 அன்று அரசு அலுவலர்கள், பணியாளர்கள், தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகள், கல்லூரி மாணவர்களுடன் இணைந்து தமிழ் சார்ந்த கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வுப் பேரணி தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகத்திலிருந்து தொடங்கி முத்து நகர் கடற்கரையில் நிறைவடைய உள்ளது. இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து தொடங்கி வைக்க உள்ளார்.மேலும் ஆட்சிமொழிச்சட்டம் தொடர்பான பட்டிமன்றம், அரசு பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி, மின்காட்சியுரை, தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகளும் நடைபெற உள்ளன. அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் ஆகியவற்றில் ஆட்சிமொழிச் சட்ட வாரத்தினை நினைவு கூரும் வகையில் ஒட்டுவில்லைகள் ஒட்டியும் துண்டறிக்கைகள் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் தமிழில் பெயர்ப்பலகை அமைப்பது தொடர்பான அரசாணை வழங்கியும் கொண்டாடப்படும்.மேலும், தொழிலாளர் துறையுடன் இணைந்து வணிகநிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வலியுறுத்தி வணிகநிறுவன உரிமையாளர்கள் மற்றும் வணிக நிறுவன அமைப்புகளைக் கொண்டு கூட்டம் நடத்தப் பெறும். இதுதவிர கல்லூரி மாணவ, மாணவிகள் பங்குபெறும் ஆட்சிமொழிப் பட்டிமன்றம், பொதுமக்கள், தமிழ் அமைப்புகளுடன் இணைந்து ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள்

### கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் வழங்கினார்



**தென்காசி டிச.11**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 15 நிலஅளவர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நில அளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 376 நில அளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கியதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 15 நிலஅளவர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயசந்திரன் மற்றும் நில அளவை துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சங்கரன்கோவிலில்

## தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் வாபஸ்: விசைத்தறிகள் இயங்கத் தொடங்கியது

**சங்கரன்கோவில், டிச.12-**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் டி.என் புதுக்குடி, புளியங்குடி, சிந்தாமணி பகுதிகளில் உள்ள விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் வீடுசார்ந்த விசைத்தறி தொழிலாளர்கள் கூலி உயர்வு ஒப்பந்தத்தை அமல்படுத்த கோரி கடந்த 22 நாட்களாக தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.



சங்கரன்கோவிலில் 1000க்கும் மேற்பட்ட விசைத்தறி கூடங்களும் 10,000க்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிலாளர்களும் விசைத்தறி தொழில் செய்து வருகின்றனர். இங்குள்ள விசைத்தறிக்கூடங்களில் நாளொன்றுக்கு 50 லட்சத்திற்கு மேலான சேலை, கைலி, கர்சிப், துண்டு உள்ளிட்ட துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகிறது

கடந்த 2024ஆம் ஆண்டு 16% கூலி உயர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகவும் ஆனால் விசைத்தறி தொழிலாளிகளுக்கு 10% கூலி உயர்வு மட்டும் வழங்கப்படுவதாகவும் 16% கூலி உயர்வு அறிவிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும் வழங்காததால் விடுபட்ட 6% கூலி உயர்வு கேட்டு கடந்த 12-ந் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் துணி உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 19ஆம் தேதியிலிருந்து விசைத்தறி தொழிலாளர்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இது சம்பந்தமாக சங்கரன்கோவில் உதவி கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற சமாதான கூட்டம் தோல்வியில் முடிவடைந்தது. மேலும் ஆர்ப்பாட்டம், சங்கரன்கோவில் தாலுகா அலுவலகத்தில் காத்திருக்கும் போராட்டம், சாலை மறியல் போராட்டம், கஞ்சித் தொட்டி திறக்கும் போராட்டம், பெண்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் எந்த பலனும் இல்லை. நேற்றுடன் நேற்றுடன் 22 நாளாக நடைபெறும் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தால் 11 கோடி மதிப்பிலான துணி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சங்கரன்கோவில் உதவி கலெக்டர் அலுவலகத்தில் கூலி உயர்வு ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தை நடைபெற்றது பேச்சுவார்த்தையில் தென்காசி மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சங்கரன்கோவில் உதவி கலெக்டர் அனிதா, துணை காவல் கண்காணிப்பாளர் செங்குட்டு வேலவன், விசைத்தறி தொழிலாளர்கள், விசைத்தறி உரிமையாளர்கள், தொழிலாளர் நல அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையின் முடிவில் 12 சதவீதம் கூலி உயர்வு கொடுப்பதாக விசைத்தறி உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டதை அடுத்து 22 நாட்களாக நடைபெறும் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக விசைத்தறி தொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்தனர். இந்நிலையில் நேற்று முதல் விசைத்தறிகள் இயங்கத் தொடங்கியது. 22 நாட்களுக்குப் பிறகு விசைத்தறிகள் இயங்கத் தொடங்கியதால் நெசவாளர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## உதயநிதி பிறந்தநாளையொட்டி ஆட்டோ டிரைவர்களுக்கு இலவச சீருடைகள்

### அப்துல் வகாப் எம்எல்ஏ வழங்கினார்



**நெல்லை டிச. 12**

துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை வண்ணார்பேட்டையில் ஆட்டோ டிரைவர்கள், ஏழை மக்களுக்கு இலவச சீருடைகள், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நெல்லை மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளர் அப்துல் வகாப் எம்எல்ஏ தலைமை வகித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கவுன்சிலர் கோகுலவாணி,மத்தியமாவட்ட திமுக துணை செயலாளர் சுரேஷ் ஆகியோர் வரவேற்றனர். இதில் மேயர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம்எல்ஏவுமான ஏஎல்எஸ் லட்சுமணன், மேலப்பாளையம் மண்டல சேர்மன் கதீஜா இக்லாம் பாசிலா, கவுன்சிலர்கள் ஜூலியட் மேரி, டாக்டர் சங்கர், கருப்பசாமி கோட்டையப்பன், நிர்வாகிகள் வக்கீல் தினேஷ், துபை சாகுல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை சகோதயா நடத்திய பல்திறன் போட்டியில் ட்ரஷர் ஐலண்ட் பள்ளி மாணவர்கள் வெற்றி




**தென்காசி டிச.12:**

ட்ரஷர் ஐலண்ட் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மதுரை சகோதயா நடத்திய பல்திறன் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். இப்போட்டிகள் சுரண்டையில் உள்ள எஸ் ஆர் பள்ளியில் நடைபெற்றது.தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்ட சேர்ந்த எஸ் ஏ வி பாலகிருஷ்ணா, கண்ணா இன்டர்நேஷனல், வேல்ஸ் வித்யாலயா, கிங்ஸ் சிபிஎஸ்இ - வள்ளியூர்,இசக்கி வித்யாஷ்ரம், ஏவிகே இண்டர்நேஷனல் போன்ற 23 க்கும் மேற்பட்ட சிபிஎஸ்இ பள்ளிகளில் இருந்து மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபெற்றனர். கடினமான இப்போட்டிகளில் கே ஜி 2 வகுப்பைச் சேர்ந்த அக்ஸா மரியம் ரைம்ஸ் ரெஸிடேஷன் எனும் குழந்தை பாடல்கள் ஒப்புவிப்பு போட்டியில் மூன்றாவது பரிசைப் பெற்றார். ஒன்பதாம் வகுப்பைச் சார்ந்த மாணவிகள் ஹர்ஷினி மற்றும் ஷகீரா ஆகியோர் ஆன் தி ஸ்பாட் ஜார்னலிசம் எனும் போட்டியில் முதல் பரிசைப் பெற்றனர். இப்போட்டிக்கான தலைப்பு நிகழ்ச்சிக்கு 15 நிமிடங்களுக்கு முன்பு தான் கொடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற மாணவர்களை நடுவர்களும் பள்ளி தாளாளர் ஷேக் செய்யது அலி, முதல்வர் சமீமா பர்வீன் ஆகியோர் வாழ்த்தினர்.

## இலஞ்சி ராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் பாரதியார் பிறந்தநாள் விழா



**தென்காசி , டிச 12:**

மகாகவி பாரதியாரின் 144 வது பிறந்த நாள் விழா இலஞ்சி இராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தலைமை ஆசிரியர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். உதவித் தலைமையாசிரியர்கள் சித்திரை சபாபதி, சொர்ணசிதம்பரம், செல்லம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நல்லாசிரியர் சுரேஷ்குமார் வரவேற்றார். தமிழாசிரியர் ஐயப்பன் பாரதியின் பெருமைகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். 7ம் வகுப்பு மாற்றுத்திறனாளி மாணவி ஆருஷியுடன், இந்துஜா, இசக்கியம்மாள் ஆகியோர் பாரதியின் பாடல் " மனதில் உறுதி வேண்டும் என்ற பாரதியின் பாடலை பாடிக்கொண்டே பத்து நிமிடங்களில் அவரது ஓவியத்தை வரைந்து காட்டினார். நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஓவிய ஆசிரியர் கணேசன் , இசை ஆசிரியர் கிருஷ்ணம்மாள் ஆகியோர் செய்திருந்தனர். மாணவி முத்ரா நன்றி கூறினார்

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பாரதியார் தின விழா

**குற்றாலம் டிச.12 :**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பாரதியாரின் 144 வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவில் கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் மற்றும் தலைமை ஆசிரியர் செல்வலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இவ் வி ழா வினை மாணவி பாரதி தொகுத்து வழங்கினார். மழலையர் பிரிவில் பயிலும் மாணவர்கள் பாரதி போல் வேடமணிந்து இருந்தனர். மாணவன் திருமால் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை பற்றி சிறப்புரையாற்றினார். மாணவன் ஜீவா பாரதியார் கவிதை உரை மேற்கோள் எடுத்துக் கூறினார். மாணவி மிருதுளா ஜனனி பெண்ணின் பெருமை, விடுதலை வேட்கை, தமிழை என் உயிர் என்பேன் போன்ற தலைப்புகளில் பாரதியார் கவிதைகளை கூறினார்.விழாவில் இறுதியாக மாணவி திவ்யதர்ஷினி உறுதிமொழி கூறி விழா இனிதே நிறைவுற்றது.இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் டாக்டர். காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா, பள்ளி முதல்வர் பாலசுந்தர், தலைமையாசிரியர் செல்வலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

## மின்சார பணியாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்பு

**சங்கரன்கோவில், டிச.12-**

தென்காசி மாவட்டம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி உத்தரவின்படியும், சங்கரன்கோவில் கோட்டப் பொறியாளர் பாலசுப்பிரமணியன் ஆலோசனையின் பேரில் சங்கரன்கோவில் மின்கோட்டம் கிராமிய உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் தங்கராஜ் கரிவலம்வந்தநல்லூர் துணை மின்நிலையத்தில் கிராமப்புற உபகோட்டத்தின் மின்சார வாரிய பணியாளர்களுக்கு பணி செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள், பாதுகாப்பு உபகரணங்களான எர்த் ராடு, இடுப்புக்கயிறு, கையுறை ஆகியவை முறையாகவும், பாதுகாப்பாகவும் கையாள்வது பற்றிய செயல்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மின்சார வாரிய பணியாளர்கள் மின்சார வேலை செய்யும் முன்னர் மின்சாரத்தை முறையாக நிறுத்தம் செய்தபின்னர் எர்த்ராடு பயன்படுத்தி நில இணைப்பு செய்தபின்னர், மின்வாரிய பாதுகாப்பு செயலியில் புகைப்படம் பதிவு செய்வதை உறுதிசெய்தல் கட்டாயம் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த பாதுகாப்பு பயிற்சி வகுப்பில் கரிவலம் பிரிவு அலுவலக உதவிப்பொறியாளர் சுகுணாதேவி, கரிவலம் துணை மின்நிலைய இளநிலைப் பொறியாளர் சங்கரசுப்பிரமணியன் உடனிருந்தனர்.

